செ. வெ. எண் : 818 நாள் : 24/9/10

செய்தி வெளியீடு – 24.9.2010

**74 கோடியே 33 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில்**
**சத்துணவு திட்டத்தில் ஒவ்வொரு குழந்தைக்கும்**
**கூடுதலாக அரிசி,காய்கறி, எண்ணெய்!**
**எரிபொருள் செலவும் உயர்த்தப்பட்டுள்ளது!**

**முதலமைச்சர் கலைஞர் ஆணை!**

சத்துணவு திட்டத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் ஐந்து நாட்களிலும் சத்துணவுடன் வேக வைத்த முட்டையை வழங்கிட 17.9.2010 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து காய்கறி, மசாலாப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றுக்கு, ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் உணவூட்டுச் செலவினம் 44 காசு என்பதை 2 வயது முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு 56 காசாகவும்; ஒன்றாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்க்கு 70 காசாகவும்; 6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்க்கு 80 காசாகவும் உயர்த்தி வழங்கிடவும்;

ஒன்று முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நாளொன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தலா 1 கிராம் சமையல் எண்ணெயினை 3 கிராமாக உயர்த்தி வழங்கிடவும்;

6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு நாளொன்றுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் தலா 100 கிராம் அரிசியையும், 9ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தலா 120 கிராம் அரிசியையும் 150 கிராமாக உயர்த்தி வழங்கிடவும்,

6ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் காய்கறியினை 50 கிராமிலிருந்து 60 கிராமாக உயர்த்தி வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் இன்று ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின் காரணமாக 11 இலட்சத்து 26 ஆயிரம் அங்கன்வாடி குழந்தைகளும்; 57 இலட்சத்து 75 ஆயிரம் பள்ளி மாணவ மாணவியர்களும் பயன்பெறுவர். அரசுக்கு ஆண்டுக்கு 74 கோடியே 33 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும்.

****

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9